# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் சட்டம்

---

*[1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1990 ஏப்பிறல் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை: சதம் 60* *தபாற்செலவு: ரூபா 1.00*

# 1990 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் சட்டம்

(1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச.வ.—ஓ. 2/89

குறித்தசில தொல்பொருள் சார்ந்த செயற்பாடுகளையும், அமைவிடங்களையும் எஞ்சியிருப்பவைகளையும் தொன்மைச் சின்னங்களையும் புராதன மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களையும் அத்துடன் பதிவேடுகளையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவாக வெளிப்படுத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் முதலியன.

2. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் விவரிக்கப்படும் தொல்பொருள் சார்ந்த செயற்பாடுகளும், அமைவிடங்களும் எஞ்சியிருப்பவைகளும் அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் நோக்கங்களுக்காக தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன.

(2) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் விவரிக்கப்படாத வேறு எவையேனும் தொல்பொருள் சார்ந்த செயற்பாடுகளை, அமைவிடங்களை, எஞ்சியிருப்பவைகளை அல்லது எவையேனும் தொன்மைச்சின்னங்களை தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவாக வெளிப்படுத்தலாம்.

(3) (அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள், அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றக் கூட்டம் நடைபெறாவிடில் அக்காலப் பகுதியின்பின்னர் நடைபெறும் முதலாவது பாராளுமன்றக் கூட்டத்தில் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற பிரேரணையுடன் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் பாராளுமன்றத்தால் அங்கீகாரம் மறுக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டளை, அத்தகைய மறுப்புத் தேதியிலிருந்து, அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந் தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும், அத்தகைய கட்டளை எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*தேசிய முக்கியத் துவம் வாய்ந்த புராதன மற்றும் வரலாற்று நினைவுச்சின்னங் களும் பதிவேடு களும்.*

3.(1) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக் கப்படும் புராதன மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள் அரசியலமைப்பிற்கான ஒன்பதாவது அட்டவணையின் நோக்கங் களுக்காக தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன.

(2) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இச்சட்டத்திற்கான இரண்டாவது அட்டவணையில் விவரிக் கப்படாத வேறு ஏதேனும் புராதன மற்றும் வரலாற்று நினைவுச் சின்னத்தை அல்லது ஏதேனும் புராதன மற்றும் வரலாற்றுப் பதிவேட்டையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக வெளிப்படுத் தலாம்.

(3) (அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலத்திற்குள், அல்லது அத்தகைய காலப் பகுதிக்குள் பாராளு மன்றக் கூட்டம் நடைபெறாவிடில், அக்காலப்பகுதியின் பின்னர் நடைபெறும் முதலாவது பாராளுமன்றத் கூட்டத்தில் அத்த கைய கட்டளை அங்கீகரிக்கப்படல்வேண்டும் என்ற பிரேரணையுடன் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் பாராளு மன்றத்தால் அங்கீகாரம் மறுக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டளை, அத்தகைய மறுப்புத் தேதியிலிருந்து, அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந் தன்மைக்குப் பங்கமின்றி இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ் வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முதலாம் அட்டவணை (பிரிவு 2 (1))

**பாகம் I**

**தொல்பொருள் அமைவிடங்களும் எஞ்சியிருப்பவையும்**

*(188 ஆம் அத்தியாயமான) தொன்மைச் சின்னங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் தொல்பொருள் ஒதுக்கிடம்.*

## பாகம் II

### தொல்பொருளியற் செயற்பாடுகள்

1. பொருட்களையும், செதுக்குப் பொறிப்புகளையும், நினைவுச் சின்னங்களையும் அத்துடன் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த அமைவிடங்களையும் ஆய்ந்தறிதலும் அகழ்தலும் அத்துடன் அத்தகைய கண்டுபிடிப்புகளைப் பதிவுசெய்தலும்.

2. புராதன நினைவுச் சின்னங்களையும் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த வேறு சொத்தையும் அவற்றின் தலிக்கோவும், சுற்றுடல் என்பவற்றையும் பேணிக் காத்தலும் பாதுகாத்தலும் வெளிக்காட்டி வைத்தலும்.

3. புராதன மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களையிட்டும் வரலாற்றுக் காலப் பகுதி, வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதி என்பவற்றையிட்டும் ஆராய்ச்சியை மேற் கொள்ளுதலும் அத்துடன் எவையேனும் கண்டுபிடிப்புகளை வெளியிடுதலும்.

4. புராதனப் பொருட்கள் கட்டளைச்சட்டத்தை நிருவகித்தல்.

5. செதுக்குப் பொறிப்புகளையிட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளுதலும் அவற்றின் மொழிபெயர்ப்பும் வெளியீடும்.

6. தொல்பொருள் நூதனசாலைகளைத் தாபித்தலும் பேணுதலும்.

7. தொல்பொருள் அமைவிடங்களிலும் நூதனசாலைகளிலும் பார்வையாளர்கட்கு சேவையை ஏற்பாடு செய்தலும்.

8. புராதன நினைவுச் சின்னங்களின் பதிவேட்டைத் தயாரித்தல்.

### இரண்டாம் அட்டவணை (பிரிவு 3 (1))

### புராதன மற்றும் வரலாற்று நினைவுச்சின்னங்கள்

(188 ஆம் அத்தியாயமான) தொன்மைச் சின்னங்கள் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் புராதன நினைவுச்சின்னம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177; (வெளிநாடு) ரூபா 236; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.